# முதல்வர் நிவாரண நிதிக்கு ராம்கோ ரூ. 2.5 கோடி

ராஜபாளையம், ஏப். 4

ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம் கொரோனா முதல்வர் நிவாரண நிதிக்கு ரூ. 2.5 கோடி நிதியுதவி அளித்துள்ளது.

நிறுவனம் சார்பில் தமிழ்நாட்டில் கடுகூர் மற்றும் தாமரைக்குளம் மற்றும் ஒடிசாவின் ஹரிதாஸ் பூரில் தனிமை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிராமங்களில் பொது உணவு ஏற்பாடு, வெப்ப ஸ்கேனர், மாஸ்க், பாது காப்பு கிட்கள், விழிப் புணர்வு பலகைகள், போன்றவைகளை தமிழ் நாடு, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, மேற்கு வங்கம் மற்றும் ஒடிசா மாநிலங்களுக்கு ரூ.3 கோடி மதிப்பில் பல்வேறு மருத்துவ உப கரணங்கள் வழங்கப்பட உள்ளது.

6,000க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு உணவு, தங்குமிடம் ,மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. வெளி மாநில தொழிலாளர்களுக்கு தினசரி அடிப்படையில் பண உதவி வழங்கப்படுகிறது,என நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

Scanned by CamScanner